# CHANGES AND DEVELOPMENT IN THE TRADITIONAL DRAMAS OF BATTICALOA IN LINE WITH TRANSITIONAL SOCIAL & CULTURAL SITUATIONS (A RESEARCH FROM 1980 – 2005)

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
17 MAR 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

A Thesis submitted
for the Degree of

**Doctor of Philosophy**

by

Mr.Muthurajah Primraj Ravichandra
EU/PGS/2008/AC/Ph.D/02

PhD05
Thesis
Library - EUSL

Department of fine Arts
Faculty of Arts and Culture
Eastern University, SriLanka
Vantharumoolai

September 2013

PROCESSED
Main Library, EUSL

# ஆய்விற்கான முன்னுரை

## மாறிவரும் சமூகப் பண்பாட்டு நிலைமைகளுக்கு ஏற்ப மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் வளர்ச்சிகளும். (1980 தொடக்கம் 2005 வரை) ஓர் ஆய்வு.

கடந்த இருபத்தைந்தாண்டுகளில் மாறிவரும் சமூகப் பண்பாட்டு நிலைமைகளுக்கு ஏற்ப மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் வளர்ச்சிகளும் பற்றிய நாடகவாக்கவியல் நின்ற ஆய்வு.

## I

1980 தொடக்கம் 2005 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் இக்கால கட்ட அரசியற் சூழல், கல்வி மறுமலர்ச்சி, பொருளாதார நிலை, இயற்கை அனர்த்தங்கள், போர் அனர்த்தங்கள் முதலானவற்றின் தாக்கத்தால் எத்தகைய மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் கண்டுள்ளது. அப்பின்புலத்தில் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் இப்பிரதேசத்தின் சமூக அடையாளமாக, இச்சமூகப் பண்பாட்டு வேர்களை வெளிக்கொணரும் முறையை ஆராய்கிறது. அவ்வறாத் தொடர்பின் மூலம் தமிழ்த் தேசிய அடையாளமாகவும் அது பரிணமித்த முறைமையையும் இனங்காண்கிறது. இந்த வகையில் அது சமூகப்பிரச்சினைகளை எடுத்துக்கூறும் வாகனமாகவும், அரசியற் சூழலில் தொடர்பியற் சாதனமாகவும், போர்ச் சூழலில் இயற்கை அனர்த்த காலகட்டத்தில் உளவடுக்களைத் தீர்க்கும் சாதனமாகவும் தொழிற்பட்ட முறைமையை இனங்காண்பதோடு அது அடைந்த வளர்ச்சி நிலையையும் ஆராய்கிறது.

மேலும் 1980ற்கு முன்னுள்ள காலப்பகுதியில் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் நிலை தொடர்பான இயங்கியல் நிலை நின்ற முழுமையான ஆய்வு மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் என்னும் தலைப்பில் மௌனகுரு அவர்களால் வெளிக்கொணரப்பட்டுள்ளதால் அவ்வாய்வின் தொடர் நிலையாக இவ்வாய்வை முன்னெடுப்பதன் மூலம் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் ஊடாக மாறிவரும் சமூகப்பண்பாட்டு நிலைகளை அடையாளம் காண்பதுடன் அதன் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் நிலையாக இனங்காண முடியும்.

இதன் மூலம் 1980ற்குப் பின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் அடைந்துள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள் சமூக அரசியல் முக்கியத்துவம் உடையதாக முகிழ்க்கின்ற அதே வேளை மரபுவழி நாடகங்கள் அதன் மூலத்தை இழந்து நிற்கின்ற சூழலையும் அடையாளப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இந்த வகையில் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் இலங்கைத் தமிழரின் அரங்கிற்கு ஓர்பன்முக முக்கியத்துவத்தையும் கலைத்துவ இன்றியமையாமையையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. அதேவேளை, அதன் பின்புலத்திலுள்ள சமூகக் கருத்து நிலைமைகளையும் நாடகவாக்க நிலைமைகளையும் இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

இவற்றையே இவ்வாராய்ச்சி செய்ய முனைகின்றது. இங்கு 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியே ஆய்வுக் களமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## II

முதல்நிலைத்தரவுகள் மூலநூல்கள், ஒலி, ஒளி நாடாக்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றின் மூலமாகக் கிடைக்கும் தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் (வாகரை முதல் துறைநீலாவணை) வாழும் கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார், கூத்தளிக்கை நெறியாளர்கள், கூத்தாய்வாளர்கள், அறிஞர்களுடனான உரையாடல்கள் மூலமாகப் பெற்ற தகவல்கள்.

## III

இவ்வாய்வு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் நாடகவாக்கச் செழுமை மரபும் மாற்றங்களும்.
2. மரபுவழி நாடகமாகக் கொள்ளப்படும் ஆற்றுகை வடிவங்களினது வகை முறைகள் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் அந்த முறைமை 1980ற்குப் பின் அமைந்துள்ள தன்மை (வடமோடி, தென்மோடி, மகுடி, வசந்தன், பறைமேளக் கூத்துக்கள் )
3. சமூக வடிவமாக 1980ற்குப்பின் மரபுவழி நாடகங்கள் அதன் பண்பாட்டு அடித்தளத்தில் செல்வாக்குச் செலுத்திய முறைமை.

4. சமூக அசைவியக்கம், அரசியற் பொருளாதாரக் காரணிகள், போர்ச்சூழல், புலம்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள், தொடர்புச்சாதன வருகை என்பன மரபுவழி நாடகங்களின் வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் எந்தளவிற்கு துணைபுரிந்துள்ளன என்பதை இனங்காணுதல்.

இவ்வாய்வு ஆறு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**முதலாவது அத்தியாயம்** :- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் பற்றி இதுவரை நடைபெற்ற ஆய்வுகளும் அவை தொடர்பான இலக்கியப் பதிவுகளும்.

இதில் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களாகக் கருதப்படும் வடமோடி, தென்மோடி, மகுடி, வசந்தன், பறைமேளக் கூத்துக்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன. மேலும் இக்காலகட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட ஈழத்தின் ஏனைய தமிழ்ப்பிரதேச மரபுவழி நாடக ஆய்வுகளுடனும், சிங்கள மரபுவழி நாடக ஆய்வுகளுடனும் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றன.

**இரண்டாவது அத்தியாயம்** :- 1980ற்குப் பின் மட்டக்களப்புச் சமூகக் கட்டமைப்பும்மாறிவரும்சமூகப்பண்பாட்டு நிலைமைகளும்.

மட்டக்களப்புச் சமூகக் கட்டமைப்பு 1980ற்குப் பின் 2005 வரை அரசியற் சமூகப் பொருளாதார பண்பாட்டு ரீதியாகவும், கல்வி மறுமலர்ச்சி காரணமாகவும், இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் அடைந்துள்ள மாற்றங்கள், வளர்ச்சி நிலைகள் பற்றி அதன் கலை பண்பாட்டோடு தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றது.

**மூன்றாவது அத்தியாயம்** :- மரபுவழி நாடகங்களும் அதன் வகை முறைமைகளும்.

மரபுவழி நாடகமாகக் கொள்ளப்படும் வடமோடி,தென்மோடி, மகுடி, வசந்தன், பறைமேளக் கூத்துக்களினது ஆற்றுகை வடிவங்கள் மட்டக்களப்புப்

பிரதேசத்தில் அமைந்துள்ள தன்மை பற்றி விரிவாக ஆராயப்படுகிறது.

நான்காவது அத்தியாயம் :- சமூக வடிவமாக 1980ற்குப் பின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்.

இதில் சமூக வடிவமாக 1980ற்குப் பின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் அதன் அழகியல் அம்சத்திலும், கலையிலும் அதன் பண்பாட்டு அடித்தளத்திலும் செல்வாக்குச் செலுத்திய முறைமை கூறப்படுகின்றது.

ஐந்தாவது அத்தியாயம்:- 1980ற்குப் பின் ஏற்பட்ட அசைவியக்கம் காரணமாக மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் அடைந்த மாற்றங்களும் வளர்ச்சிகளும்.

சமூக அசைவியக்கம், அரசியற் பொருளாதாரக் காரணிகள், போர்ச் சூழல், புலம்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள், தொடர்புச்சாதன வருகை என்பன மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் துணை புரிந்துள்ள வகைமுறை இனங்காண்கின்றது.

ஆறாவது அத்தியாயம் :- முடிவுரை

இதில் ஆய்வு மூலம் கண்டறியப்பட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்படுகின்றன.